அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் நிகழ்ந்து 5ஆம் ஆண்டு நிறைவு!

# இடஒதுக்கீடு அடிப்படையில் அர்ச்சகர் பணி நியமனத்தை நடத்துக!

## அரசுக்கு-தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் கோரிக்கை!

சென்னை, ஆக.17-

தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் வா. ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நாள் ஆகஸ்ட் 14,2021. தமிழக வரலாற்றில் மன்னர்களின் ஆட்சிகளில் காணக் கிடைக்காத சமத்துவம், சமூகநீதி என்ற விளிம்புநிலை மக்களை மையப்படுத்திய கோட்பாடுகள் ஆட்சி அதிகாரத்தில் விதைக்கப்பட்டு வளர்ந்து செழித்த காலம், திராவிட இயக்கத்தின் ஆட்சிக்காலம்.

சமூகத்தின் மிக முக்கிய அதிகார மையமான கோயில் கருவறையில் 2000 ஆண்டுகளாக நிலவி வந்த பார்ப்பனீய மேலாண்மை அடிப்படையிலான கருவறைத் தீண்டாமை இருள் அகற்றப்பட்ட காலமும் இதுதான்.

அனைத்து சாதி அர்ச்சகர் நியமனம் நிகழ்ந்து இன்றுடன் 5ஆம் ஆண்டு நிறைவடைகிறது.

5 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு 29 அனைத்து சாதி அர்ச்சக மாணவர்களை கோயில் அர்ச்சகர்களாக நியமனம் செய்தது. அந்த அர்ச்சகர்களுக்கு ஏராளமான நெருக்கடிகளை ஆர் எஸ் எஸ் பார்ப்பனிய சக்திகள் கொடுத்தாலும் அதையும் தாண்டி சிறப்பான முறையில் கோயில்களில் பூஜை செய்து குடமுழுக்கு நடத்தி மக்கள் மத்தியில் முறையான அங்கீகாரத்தை பார்ப்பனரல்லாத 29 அர்ச்சகர்களும் பெற்றுள்ளனர் என்பது இத் தருணத்தில் மிகவும் நினைவு கூரத்தக்கது.

நம்மை கவலை கொள்ளச் செல்லும் விசயங்களும் தொடர்ந்து நடந்து வருவதை புதிய அரசு இந்நாளில் பரிசீலிக்க வேண்டியுள்ளது. அர்ச்சகர் நியமனம், விதிகள், இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தை எதிர்த்த வழக்குகளில் அர்ச்சகர் நியமன விதிகள் ரத்து செய்யப்பட்டதுடன், ஆகமக் கோயில் பார்ப்பனருக்கு, ஆகமம் அல்லாத கோயில்கள் சூத்திர, பஞ்சமருக்கு எனப் பிரிக்கும் முயற்சிகளும் நடக்கிறது.

இதை தமிழக அரசு அனுமதிக்க கூடாது.புதிய விதிகள்,சட்டம் கொண்டு வந்தோ அல்லது உச்சநீதி மன்றம் சென்றோ இப் பார்ப்பனீய சதியை முறியடிக்க வேண்டும். அர்ச்சகர் நியமனத்திற்கு ஆகமம் தடையில்லை குறிப்பிட்ட கோயிலில் ஆகமத்தை படித்த எந்த இந்துவும் அர்ச்சகராகலாம், சாதி தடையில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும், திருச்சி வயலூர் முருகன் கோயில் அர்ச்சகர் நியமனத்தை ரத்து செய்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பிற்கு, 11.08.2023 அன்று மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திருவாளர்கள் S.S.சுந்தர் & பரத சக்கரவர்த்தி அமர்வு விதித்த தடையும், அர்ச்சகர் நியமனத்திற்கான சட்டத் தடைகளை அகற்றியது .

அனைத்து சாதி இந்துக்களும் அர்ச்சகர் ஆவதை தொடர்ச்சியாக எதிர்த்து வரும் பார்ப்பனர்கள், ஆர் எஸ்எஸ், பாஜக, இந்து முன்னணியினர் தொடர்ந்து அர்ச்சகர் நியமனத்துக்கு எதிரான பல்வேறு முட்டுக்கட்டைகளை உருவாக்கி உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து தற்போது தமிழகத்தில் உள்ள கோயில்களில் அர்ச்சகர் நியமனம் செய்ய உச்சநீதிமன்றத்தில் தடை பெற்றுள்ளனர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எம் எம் சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு விதித்த தடை கடந்த மூன்றாண்டாக நீக்கப்படவில்லை. உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு, மேல் முறையீடும் செய்யப்படவில்லை.

அர்ச்சகர் நியமனம் தொடர்பாக விதிகளை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்த பின்பு, இது வரை புதிய விதிகளுக்கான எந்த நடவடிக்கையும் இல்லை.

அர்ச்சகர் நியமனத்திற்கான ஆகமங்களில் சாதி தடையாக இருக்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்பும் அர்ச்சகர் நியமன நடவடிக்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை

எனவே, இட ஒதுக்கீடு அடிப்படையில் விரைந்து கோயில்களில் உடனடியாக அர்ச்சகர் பணிநியமனத்தை நடத்த வேண்டும்.

மிக முக்கியமாக, எங்களுடன் 2008 ஆம் ஆண்டிலேயே பயிற்சி முடித்து தீட்சை பெற்ற 178க்கும் மேலான மாணவர்கள் உள்ளனர். அதன்பின் சுமார் 400 மாணவர்கள் படித்து முடித்துள்ளனர். இவர்களுக்கு உடனே பணிநியமனம் வழங்க வேண்டும். இன்று வரை மதுரை மீனாட்சி யம்மன், திருச்செந்தூர், பழனி முருகன் கோயில்கள், திருவரங்கம் அரங்கநாதர், சென்னை கபாலீசுவரர் கோயில்களில் தமிழ்ச் சமுதாயத்தின் தேவர், கவுண்டர், யாதவர், வன்னியர், செட்டியார், பிள்ளை, ஆதிதிராவிடர் உள்ளிட்டோர் கோயில் கருவறையில் நுழைய முடியவில்லை என்பது கடும் வேதனைக்குரியது.

அரசியல் சட்டத்தின் ஆட்சி என்பதற்கான சவால் இது.

எனவே இந்நாளில் தமிழக முதல்வர் அவர்கள், தமிழ் மக்கள் உழைப்பில் உருவாக்கப்பட்ட கோயில்களில் தமிழையும் தமிழர்களையும் நிலைபெறச் செய்ய வேண்டுகிறோம்.

மேற்படி பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாக

(i) தடையற்ற அர்ச்சகர் நியமனத்திற்கு உரிய சட்ட ஆலோசனை வழங்க தமிழக அரசு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்ட வல்லுநர் குழு அமைக்க வேண்டும்.

(ii)அனைத்து சாதி இந்துக்கள் அர்ச்சகர் நியமனத்திற்கு சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும்.

(iii) 17 ஆண்டுகளாக வேலைக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கு 20072008 ஆண்டில் மாணவர்களுக்கு தற்போது வரை உள்ள மாதங்களுக்கு இழப்பீடும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாதங்களிலும் இழப்பீட்டுத் தொகையமாதம் ரூபாய் 20,000 வேலை வழங்கும் வரை தமிழக அரசு வழங்க வேண்டும்.

(iv) அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.15,000 வழங்க வேண்டும்

(vi) தமிழக அரசு மூத்த ஐஏஎஸ் அதிகாரி ஒருவரை நியமித்து அர்ச்சகர் மாணவர் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வும், கோயிலில் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கான உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும்

(Vii)அனைத்து சாதி அர்ச்சக பயிற்சி பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஐந்து பேர் இறந்து விட்டனர். அவர்களின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

தமிழக முதல்வரின் நேரடி தலையீடு இல்லாமல் அர்ச்சகர் மாணவர் திட்டம் ஆலயங்களில் சமத்துவம் நிறைவேற வாய்ப்பு இல்லை.

எனவே கலைஞரின் நினைவு மாதமான ஆகஸ்ட் மாதத்தில், கலைஞரின் கனவும், தமிழக முன்னாள் முதல்வரின் நியமனங்களும், எதிர்கால நியமனங்களும் கேள்விக்குள்ளான சூழலில் உரிய கோரிக்கையை தமிழக முதல்வர் முன்பு வைக்கிறோம்.

உரிய நடவடிக்கை எடுத்து, ஈராயிரம் ஆண்டு கருவறைத் தீண்டாமை இருள் முழுமையாக அகற்றக் கோருகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

80வது சுதந்திர தினம் விழா –

# வந்தவாசியில் சுதந்திரதின விழா!

## எம்.எஸ்.தரணி வேந்தன் எம்.பி.தேசிய கொடி ஏற்றி வைத்தார்!

வந்தவாசி, ஆக.17-

இந்திய நாட்டின் 80வது ஆண்டு சுதந்திர தின திருவிழா நாளும் முழுதும் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது அந்த வகையில் திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் நாட்டின் 80வது ஆண்டுசுதந்திர தின விழாகோலாகலமாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வந்தவாசி நகர மன்ற தலைவர் ஜலால் தலைமை தாங்கினார். வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அம்பேத்குமார் முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் வீர வாஞ்சிநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் வந்தவாசி நகர செயலாளர் தயாளன்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவி குழுவினர், பொதுமக்கள் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நாட்டின் 80வது சுதந்திர தின விழாவில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அம்பேத்கர், நகர மன்ற தலைவர் ஜலால்,துணைத் தலைவர் சீனிவாசன், நகராட்சி ஆணையர் வீரவாஞ்சிநாதன்,நகர செயலாளர்தயாளன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்

கல்லூரிகள் போதைப்பொருள் விற்பனை மையங்களாக மாறி வரும் நிலையில்

# முதல்வர் வாய் திறக்காமல் கள்ள மௌனத்தில் இருப்பது ஏன்?

## முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!



சென்னை, ஆக.17-

“கல்லூரிகள் போதைப் பொருள் விற்பனை மையங்களாக மாறிவரும் நிலையில் முதல்வர் விஜய் வாய் திறக்காமல் கள்ள மவுனத்தில் இருப்பது ஏன்?” என்று முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

கோவை, தனியார் கல்லூரி மாணவர்களிடையே அதிகரித்துள்ள போதைப் பொருள் பயன்பாடு குறித்து காவல் துறைக்கு தகவல் கொடுத்ததாக மாணவர் அமுதன் போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்படுத்தும் 20 பேர் கொண்ட மாணவர் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்..

அடுத்த 3 தினங்களில் சென்னை திருவெற்றியூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் தினேஷ் போதைப்பொருள் பயன்படுத்தியதை காட்டிக்கொடுத்ததாக சக மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர் கும்பல் 30 பேர் சேர்ந்து ஈவிரக்கமின்றி அடித்து கொன்ற சம்பவத்தை பார்க்கும்போது தமிழ்நாட்டு காவல்துறை பயனற்ற சினிமாவில் தோன்றும் காவல்துறையாக மாறி விட்டதோ ? என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது CM sir?

அதுபோல் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் Neet கோச்சிங் சென்ற மாணவிகள் வகுப்பறையிலேயே மது அருந்திய கொடுமை காவல்துறையை கையில் வைத்திருக்கும் உங்கள் கவனத்திற்கு வரவில்லையா? அல்லது ஒட்டுமொத்த காவல்துறையையும் உங்கள் நண்பர்களிடமே கொடுத்துவிட்டு தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா CM sir ?

தமிழ்நாட்டில் பெரும்பாலும் உங்கள் கட்சியினர் தான் காவல்துறை ஒத்துழைப்போடு தங்கு தடையின்றி மாணவமாணவிகளிடம் போதை பொருட்களை விற்பனை செய்து வருவது உங்களுக்கு தெரியுமா? இதுவரை தடுக்க எந்த முயற்சியும் செய்யாமல் உங்கள் கட்சியினர் மூலம் தமிழக மாணவ மாணவிகளை சீரழிக்க துணிந்து விட்டீர்களா CM sir ?

முன்னாள் முதல்வர் முகஸ்டாலின் மக்களை தேடி மருத்துவம் கொடுத்தார்.. நீங்களோ மாணவ மாணவிகளைத் தேடி மதுவை கொடுக்குறீர்களே! கல்லூரிகளை போதைப் பொருள் விற்பனை மையங்கள் ஆக்கி வகுப்பறைகளை மது குடிக்கும் பார்ஆக மாற்றிய உங்களையும் உங்கள் கட்சியினரையும் மக்கள் மன்னிப்பார்களா ? இதற்கு பிறகும் வாயைத் திறக்காமல் கலக்கத்தில் மயக்கத்தில் கள்ள மௌனத்தில் இருக்குறீர்களே CM sir?

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி

# 13 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஆக. 17 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்,நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 13 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வட்டக் கழக பொறுப்பாளர் முருகன் தலைமையில் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதிச் செயலாளர் ஐவகர் முன்னிலையில் (14.08.2026 வெள்ளிகிழமை) அன்று மாலை நாகர்கோவில், வடசேரி கொம்மண்டையம்மன் கோவில் தெரு பகுதியில் நடைபெற்றது. கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.



கூட்டத்தில் மாநகர தி.மு.க. அவைத் தலைவர் பன்னீர் செல்வம், மாவட்ட பிரதிநிதி அணஞ்சபெருமாள், மாநகர பிரதிநிதிகள் தனராஜ், ஜனார்த்தனன், மாநகர ஆதிதிராவிட அணி அமைப்பாளர் மதுபாலன்கழக நிர்வாகிகள் பாவநாசம், செல்வம், நாகராஜன், ராஜேந்திரன், ஆறுமுகம், நவீன், சரிதா, நேசமணி, வசந்தி உட்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகி களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.பி. பச்சையப்பன்

### ஆகஸ்ட் 16 (2022)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.

1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்

### ஆகஸ்ட் 17 (1983)



தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.

இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.

தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.